களத்தில் கண்துஞ்சாமல்

# செயல்படுவோம்: மக்களைக் காப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, அக்.22-

பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், களத்தில் கண் துஞ்சாமல் செயல்பட்டு மக்களைக் காப்போம் என்று சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதையடுத்துமுன்னேற்பாடுநடவடிக்கைகள் குறித்து

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றும் (21.10.2025) காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டதுதொடர்பாக

சமூகவலைதளங்களில்வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையை எதிர்கொள்வது குறித்து, இன்றும் காணொலிக்காட்சி வாயிலாக ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினேன்.

பொதுமக்களிடம் இருந்து பெறப்படும்பு கார்கள்மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும், நெல்கொள்முதல் பணிகளைத் தொய்வின்றி மேற்கொள்ளவும் உத்தரவிட்டு, எடுக்கப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்துக் கேட்டறிந்தேன்.

மக்கள் பிரதிநிதிகளும், ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் களத்தில் கண்துஞ்சாமல் செயல்பட்டு, மக்களைக்காப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்தப்படுமா?

## பேரவையில் டாக்டர் வை.முத்துராஜா கேள்வி!



சென்னை, அக்.22-

அடுத்த ஆண்டு (2026) ஜனவரி 26ந் தேதி புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோயிலுக்கு ரூ.46 லட்சம் செலவில் கும்பாபிஷேகம் நடைபெறும் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா எழுப்பிய வினாக்களுக்கு அறித்த பதில் வருமாறு:-

**வை.முத்துராஜா:** புதுக்கோட்டை தொகுதியில் உள்ள ஸ்ரீபிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஸ்வரர் கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோயிலுக்கு ரூபாய் 46 லட்சம் செலவில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக்கோயில் குடமுழுக்கிற்கு அடுத்த ஆண்டு (2026) ஜனவரி 26ந் தேதி என்று நாள் குறிக்கப்பட்டிருக்கின்றது. அன்றைய தினத்தோடு இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கோயில்களின் 4,000 குடமுழுக்கு நிறைவு பெறும்.

**டாக்டர் வை.முத்துராஜா:** புதுக்கோட்டை பிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஸ்வரர் கோயிலின் திருப்பணிகளுக்கு ரூபாய் 46 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சருக்கும். துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அறநிலையத் துறை அமைச்சருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இக்கோயிலானது காசி விஸ்வநாதர் ஆலயத்தின் தீர்த்தத்திற்கு நிகரான புனிதத்தை கொண்டதும், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சியாமாசாஸ்திரி வந்து பாடிய ஆலயம் என்ற சிறப்பினையும் கொண்டது. புதுக்கோட்டை பெரிய கோயில் என்ற பெருமைக்குரிய பிரகதாம்பாள் கோயிலுக்கு போதிய உபயதாரர்கள் இல்லாத காரணத்தினால் குடமுழுக்கு நடத்த காலதாமதம் ஆகிறது. ஆகவே அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து விரைந்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** கோயிலின் திருப்பணி சுமார் 13 கோடி ரூபாய் செலவில் உபயதாரர்கள் நிதி கொண்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மாத இறுதிக்குள் அந்த பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்து விரைவுபடுத்தி எவ்வளவு விரைவாக குடமுழுக்கு நடத்தப்பட வேண்டுமோ அவ்வளவு விரைவாக குடமுழுக்கு நடத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**டாக்டர் வை.முத்துராஜா:** புதுக்கோட்டை மாநகராட்சி கீழமூன்றாம் வீதி நகர மையப்பகுதியில் அருள்பாலித்து வரும் வரதராஜ பெருமாள் கோயில் திருப்பணிகள் தொடங்கி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. திருப்பணிகள் தொய்வின்றி விரைவாக நடைபெற அறநிலையத்துறை சார்பாக கூடுதல் நிதி ஒதுக்கிடவும், புதுக்கோட்டை மாநகராட்சி பல்லவன் குளம் அருகில் அமைந்துள்ள வேதநாயகம் உடனுறை சாந்தநாத சுவாமி திருக்கோயில் பருவ மழை காலத்தில் குளம் நிரம்பி கோயிலுக்குள் மழை நீர் சென்று விடுகிறது. பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகவே அமைச்சர் பல்லவன் குளத்தை தூர்வாரி மழை நீர் வடிகால்களை சரி செய்து மறுசீரமைப்பு செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** வரதராஜ பெருமாள் கோயிலில் ஒரு கோடி 46 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதோடு உறுப்பினர் கோரிய அந்த தெப்பக் குளமானது மாசிமகத்திற்கு மாத்திரம் இந்து சமய அறநிலையத்துறை எடுத்துக் கொள்கிறது. மற்ற நேரங்களில் அந்த குளத்தைப் பொறுத்தளவில் மாநகராட்சி தான் பராமரிக்கின்றது.

குளத்திற்கு தண்ணீர் வருகின்ற பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் ஆகவே நிறைந்திருக்கின்றன. மாநகராட்சியும் மாவட்ட நிர்வாகமும் இந்து சமய அறநிலையத்துறையும் ஒருங்கிணைந்து இந்த தீபாவளிக்கு பிறகு ஆய்வுக் கூட்டத்தை நடத்தி நிரந்தர தீர்வு காணப்படும். இந்த மாசிமகம் தெப்பம்

சிறப்பாக நடைபெறுவதற்கு அனைத்து . நடவடிக்கைகளையும் இந்து சமய அறநிலையத்துறை மேற்கொள்ளும்.

திரு.வி.க. நகர் தொகுதி - 76 மற்றும் 77-வது வட்டம்

# கே.எம். கார்டன் - தட்டான்குளம் பகுதிகளில் கழிவுநீர் உந்து நிலையம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, அக்.22-

திரு.வி.க நகர் தொகுதி, 6வது மண்டலம், 76 மற்றும் 77-வது வட்டம், கே.எம். கார்டன் மற்றும் தட்டான் குளம் ஆகிய பகுதிகளில் உள்ள கழிவுநீர் உந்து நிலையங்களை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கொட்டும் மழையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, கழிவுநீர் தேங்காமல் இருக்க பணிகளை துரிதப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று முன்தினம் (20.10.2025) திரு.வி.க நகர் தொகுதி, 6வது மண்டலம், 76 மற்றும் 77-வது வட்டம், கே.எம். கார்டன் மற்றும் தட்டான் குளம் ஆகிய பகுதிகளில் உள்ள கழிவுநீர் உந்து நிலையம் (K.M. Garden Pumping Station) மற்றும் 77வது வட்டம், தட்டான்குளம் பகுதியில் கழிவுநீர் வெளியேற்றும் பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் உள்ள கழிவுநீர் உந்து நிலையம் (Thattankulam Pumping Station) பழுது ஏற்பட்டதால் கழிவுநீர் சாலையில் தேங்கி பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது.

இந்த பழுதினை உடனடியாக சரி செய்யப்பட்டதினை தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் கொட்டும் மழையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, கழிவுநீர் தேங்காமல் இருக்க பணிகளை துரிதப்படுத்துமாறும், இனி வரும் காலங்களில் இது போன்ற பழுதுகள் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் எம்.சாமிக்கண்ணு, செ. தமிழ்வேந்தன், மாமன்ற உறுப்பினர் திருமதி.தமிழ்ச் செல்வி சசிகுமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் கொசப்பூர் தியாகி விஸ்வநாததாஸ் நகர், சுபம் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளதாக தகவல் அறிந்த, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன்,பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலர் தேவேந்திரனுக்கு தகவல் தெரிவித்து, மேற்படி இடத்தை வட்ட செயலாளர் கே. கருணாகரன், சி. மூர்த்தி, டி.திவாகர் ஆகியோருடன் பார்வையிட்டு சுபம் காலனி குறுக்கு சாலையை ஜேசிபி இயந்திரங்கள் மூலம் பள்ளம்வெட்டி மழை நீர் வெளியேற குழாயை பதித்துக் கொடுத்தனர்.

சென்னையில்

# இன்று பள்ளிகளுக்கு விடுமுறை!

## செங்கல்பட்டு - கடலூர் மாவட்டங்களில் பள்ளி - கல்லூரிகளுக்கு விடுமுறை!

சென்னை, அக். 22 -

கனமழை காரணமாக சென்னையில் இன்று பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக சென்னையில் (இன்று 22.10.2025 புதன்கிழமை) பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், செங்கல்பட்டு மாவட்டத்தில் இன்று பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலூரில் இன்று பள்ளி - கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பருவமழை: அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில்

# சென்னை - தாம்பரம் - ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட எம்.பி. - எம்.எல்.ஏ.க்கள் - உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களின் உத்தரவுப்படி, நடப்பு பருவமழையின் போது கழகத்தினர் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நிவாரணப்பணிகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கிட **முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு** அவர்கள் தலைமையிலும், **இளைஞரணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையிலும் **“சென்னை - தாம்பரம் ஆவடி ஆகிய மாநகராட்சிகள் மற்றும் பூந்தமல்லி நகராட்சிக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள், கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர்துணைமேயர்கள், கவுன்சிலர்கள், மாநகர, நகர, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்” இன்று (22.10.2025 - புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது.**

இக்கூட்டத்தில் சென்னை, தாம்பரம், ஆவடி மாநகராட்சிகள், பூந்தமல்லி நகராட்சிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் மேயர்கள், துணை மேயர்கள், கவுன்சிலர்கள், மாநகர நகர - பகுதிவட்டக் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 21.10.2025.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

ரஷ்ய எண்ணெய் இறக்குமதி - ஆபரேசன் சிந்தூர் விவகாரங்கள்

# டிரம்ப் பேசும் போதெல்லாம் - பிரதமர் மோடி ‘மவுனி பாபா’ ஆகிவிடுகிறார்!

## காங்கிரஸ் கட்சி குற்றச்சரட்டு!

புதுடெல்லி, அக்.22-

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்திக்கொள்ள வேண்டும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் மீண்டும் எச்சரித்துள்ள நிலையில், இவ்விவகாரத்தில் பிரதமர் மோடி மவுனம் காப்பதாக காங்கிரஸ் கட்சி கடுமையாக குற்றம் சாட்டியுள்ளது. உக்ரைன் - ரஷ்யா மோதல் தொடங்கியதிலிருந்து, சர்வதேச எதிர்ப்புகளை மீறி இந்தியா ரஷ்யாவிடமிருந்து சலுகை விலையில் கச்சா எண்ணெய்யை அதிகளவில் இறக்குமதி செய்து வருகிறது. இதற்கு அமெரிக்கா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்தியாவின் இந்தச் செயல், உக்ரைன் மீதான போருக்கு ரஷ்யாவுக்கு நிதியுதவி செய்வது போல் உள்ளது என அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது. இந்நிலையில், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை நிறுத்தி க் கொள்வதாக பிரதமர் மோடி தன்னிடம் உறுதியளித்ததாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த சில நாட்களுக்கு முன்பு தெரிவித்திருந்தார். ஆனால், இதனை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் திட்டவட்டமாக மறுத்தது.

பிரதமர் மோடிக்கும், அமெரிக்க அதிபர் டிரம்புக்கும் இடையே சமீபத்தில் எவ்வித தொலைபேசி உரையாடலும் நடைபெறவில்லை என்றும் விளக்கம் அளித்திருந்தது. இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள பதிவில், ‘ரஷ்யாவிடமிருந்து இந்தியா எண்ணெய் இறக்குமதி செய்யும் விவகாரத்தை கடந்த ஐந்து நாட்களில் மட்டும் அமெரிக்க அதிபர் டிரம்ப் மூன்று முறை எழுப்பியுள்ளார். புடாபெஸ்டில் ரஷ்ய அதிபர் புதினை சந்திப்பதற்கு முன்பு இந்த எண்ணிக்கையை அவர் இன்னும் அதிகரிப்பார் என்பதில் சந்தேகமில்லை.

தனது நல்ல நண்பரான மோடியிடம் அவர் பேசியதாகவும், இறக்குமதியை நிறுத்த இந்தியா உறுதியளித்துள்ளதாகவும் டிரம்ப் கூறுகிறார். ஆனால், அத்தகைய உரையாடல்கள் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறுகிறது. வெளியுறவுத்துறையின் இந்த மறுப்பை டிரம்ப் தெளிவாக நிராகரித்துள்ளார்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ‘ஆபரேஷன் சிந்தூர்’ விவகாரத்திலும், ரஷ்ய எண்ணெய் இறக்குமதி விவகாரத்திலும் டிரம்ப் பேசும் போதெல்லாம் பிரதமர் மோடி ‘மவுனி பாபா’ ஆகிவிடுகிறார் என்றும் அவர் கடுமையாக சாடியுள்ளார். இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை முற்றிலும் சிதைந்துவிட்டதாகவும், பிரதமர் மோடி அமெரிக்க அதிபர் டிரம்பைக் கண்டு அஞ்சுகிறார் என்றும் காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

# இராயபுரம் தொகுதியில் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. ஆய்வு!

## அதிகாரிகள் – இயந்திரங்களைக் கொண்டு மழைநீர் வெளியேற்றம்!

சென்னை, அக். 22 -

சென்னயில் பெய்து வரும் வடகிழக்கு பருவ மழையால் நேற்று காலை முதல் சாலை - தெருக்களில் மழை நீர் தேங்குகிறதா என்பதை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி பார்வையிட்டு, தண்ணீர் உள்ள பகுதிகளில் அதிகாரிகளை வரவழைத்து தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டார்.

இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 48, 49, 50, 51, 52 மற்றும் 53 வது வார்டுகளில், நேற்று (21.10.2025) காலை முதல் பெய்துவரும் கன மழையினால் தண்ணீர் தேங்கியிருக்கும் பகுதிகளை, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி சென்னை மாநகராட்சி அதிகாரிகள், கழிவுநீர் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அதிகாரிகளுடன் நேரில் ஆய்வு செய்தார்.

மேலும் மழைநீர் தேங்கியிருக்கும் பகுதிகளை சரி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதன்படி அதிகாரிகள் மாநகராட்சி லாரிகள், மோட்டார் பம்புகளைக் கொண்டு தண்ணீரை வடிய வைத்தனர்.

இதில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், வட்டச் செயலாளர்கள் கொரியர் முருகன், காட்டன் சதீஷ் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சென்னையில் பெய்து வரும் வடகிழக்கு பருவ மழையால் நேற்று காலை முதல் சாலை – தெருக்களில் மழை நீர் தேங்குகிறதா என்பதை இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 48, 49, 50, 51, 52 மற்றும் 53 வது வார்டுகளில், ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.எ. மாநகராட்சி அதிகாரிகள், கழிவுநீர் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அதிகாரிகளுடன் நேரில் ஆய்வு செய்து, மழைநீர் தேங்கியிருக்கும் பகுதிகளை சரிசெய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதன்படி அதிகாரிகள் மாநகராட்சி லாரிகள், மோட்டார் பம்புகளைக் கொண்டு தண்ணீரை வடிய வைத்தனர். உடன் பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், வட்டச் செயலாளர்கள் கொரியர் முருகன், காட்டன் சதீஷ் மற்றும் பலர் உடன் இருந்தனர்.